MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# எட்டுத்தொகை அகநூல்களில் இயற்கையும் வாழ்வாதார தொழில்களும்

ச.ப.சத்தியப்பிரியா
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி
சூலூர், கோவை - 641 402.

நெறியாளர்
முனைவர் வா. சித்ரா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி,
சூலூர், கோவை - 641 402.

JANUARY - FEBRUARY

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

# Nature and Livelihood Occupations in the Akam Poems of the Ettuthokai

**S.P SATHIYAPRIYA**

**Part-Time Ph.D. Research Scholar**
**Department of Tamil**
**R.V.S. College of Arts and Science**
**Sulur, Coimbatore – 641 402, Tamil Nadu, India**

**GUIDE**

**Dr. V. CHITRA**

**Associate Professor**
**Department of Tamil**
**R.V.S College of Arts and Science**
**Sulur, Coimbatore – 641 402, Tamil Nadu, India**

**Abstract**

The Akananuru texts of the Ettuthokai corpus reflect the inner life and emotional world of the Sangam-age Tamils. These works not only portray human emotions but also clearly document the social and economic conditions in which they evolved. In particular, the Akam poems reveal that nature-based occupations formed the fundamental basis of human life during the Sangam period.

Based on the classification of landscapes into the five Thinai divisions, each region is associated with specific natural resources and corresponding occupations. In the Kurinji landscape, forest-based activities such as hunting, honey collection, and gathering tubers were predominant. The Mullai region was characterized by pastoral occupations including cattle rearing and dairy production. The Marutham landscape emphasized settled agriculture, irrigation, ploughing, and harvesting.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**In the Neithal region, marine-based activities such as fishing, salt production, and maritime trade constituted the main livelihood. In the Paalai landscape, environmental aridity led to migration, travel, and emergency-based occupations.**

**This study highlights how nature, land, occupation, and human life are portrayed as an integrated and interdependent system in the Akam texts of the Ettuthokai. The Sangam people did not view nature as an object to dominate, but as a living force with which they coexisted harmoniously. Accordingly, they developed occupational practices aligned with natural rhythms. This research demonstrates the ecological awareness and sustainable living philosophy embedded in Sangam society.**

**Keywords:**

**Natural Resources, Kurinji Landscape, Kuravar (Hill Tribe), Water Resources System, Trees, Millet Cultivation, Women, Birds, Animals, Bow, Arrow, Lamp.**

**ஆய்வு சுருக்கம்**

எட்டுத்தொகை அகநூல்கள் சங்ககால தமிழரின் அக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களாகும். இந்நூல்களில் மனித உணர்வுகள் மட்டுமல்லாது, அவை உருவாகும் சமூக-பொருளாதாரச் சூழலும் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக இயற்கை சார்ந்த தொழில்கள் சங்ககால மனித வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமாக விளங்கியதை அகநூல்கள் வெளிப்படுத்துகின்றன.

ஐந்திணை நிலப் பிரிவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு திணைக்கும் உரிய இயற்கை வளங்களும் அவற்றைச் சார்ந்த தொழில்களும் அமைந்துள்ளன. குறிஞ்சி திணையில் வேட்டையாடல், தேன் எடுப்பு, கிழங்கு சேகரித்தல் போன்ற காட்டு சார்ந்த

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தொழில்களும்; முல்லை திணையில் கால்நடை மேய்ப்பு, பால் பொருள் உற்பத்தி போன்ற மேய்ச்சல் தொழில்களும் காணப்படுகின்றன. மருதம் திணையில் வேளாண்மை, உழவு, நீர்ப்பாசனம், அறுவடை போன்ற நிலைபெற்ற விவசாயத் தொழில்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நெய்தல் திணையில் மீன்பிடித்தல், உப்பு உற்பத்தி, கடல் வாணிபம் போன்ற கடல் சார்ந்த தொழில்கள் வாழ்வாதாரமாக விளங்குகின்றன. பாலை திணையில் இயற்கை வறட்சியின் காரணமாக இடம்பெயர்தல், வழிப்பயணம், அவசரத் தொழில்கள் போன்றவை உருவாகின்றன.

இந்த ஆய்வு, எட்டுத்தொகை அகநூல்களில் இயற்கை, நிலம், தொழில், மனித வாழ்வு ஆகியவை ஒன்றோடொன்று இணைந்து செயல்படும் ஒருங்கிணைந்த அமைப்பாகச் சித்தரிக்கப்படுவதை விளக்குகிறது. சங்ககால மக்கள் இயற்கையை ஆதிக்கம் செலுத்தும் பொருளாக அல்லாது, தங்களுடன் இணைந்து வாழும் சக்தியாகக் கருதி, அதனுடன் ஒத்திசைந்த தொழில்முறைகளை உருவாக்கியிருந்தனர் என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. இதன்மூலம் சங்ககால சமூகத்தின் சுற்றுச்சூழல் அறிவும் நிலைத்த வாழ்வியல் சிந்தனையும் வெளிப்படையாகக் காணப்படுகின்றன.

## திறவுச் சொற்கள்

இயற்கைவளம்,குறிஞ்சி நிலம், குறவர், நீர்நிலை அமைப்பு, மரங்கள், தினைப்பயிர், பெண்கள், பறவைகள், விலங்குகள், வில், அம்பு, விளக்கு

## முன்னுரை

பழந்தமிழரின் வாழ்க்கை முறை இயற்கையோடு இயைந்து இருந்துள்ளது. நாடோடியாகக் காடுகளிலும், திறந்த வெளிகளிலும், அலைந்து திரிந்த

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மனிதன் இயற்கையாகத் தாவரங்களிலிருந்து கிடைத்த காய்கள், கிழங்குகள், கனிகள், கொட்டைகள் முதலியவற்றை உணவாக உட்கொண்டனர்.

இயற்கையின் வளம் குறையக் குறைய தாவரங்களை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அம்மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியில், நில அமைப்பிற்கேற்ப பல தொழில்களைச் செய்துள்ளனர். தினை விதைத்தல், ஆடு மாடு மேய்த்தல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல், தேனெடுத்தல், கிழங்ககழ்தல் போன்ற இயற்கை சார்ந்த தொழில்களைச் செய்து வந்துள்ளனர். சிலர் வழிப்பறி கொள்ளையை ஒரு தொழிலாகச் செய்து வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

இத்தொழில்களைப் பழந்தமிழர் செய்து வந்துள்ள முறைமை அகப்பாடல்களின் துணைகொண்டு இவ்வியலில் ஆய்வு செய்யப்படுகிறது.

## குறிஞ்சி நிலம்

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாகும். இந்நிலம் சிறுசிறு குன்றுகளும், மண்ணும் கலந்த பகுதியாக இருந்துள்ளது. இந்நிலத்தில் பயிர்த்தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதிகள் வெவ்வேறு இயல்பு கருதி வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டதை அகப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலம் 'துடவை' என்று அழைக்கப்பட்டதை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**"புவைன் துடவை...."**

**குறுந்-105-1**

என நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். மரங்களை அழித்து விளைநிலமாக்கப்படும் புதிய புனத்தை 'இதை' என்றனர். இச்செய்தியை,

**......... குவிமுகிழ் இருப்பை,**

**"இதைப்புன வரகின்.......**

**அகம் -394-3**

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றன. பழமையான விளைநிலத்தை 'முதைபுனம்' என்று குறித்துள்ளனர். இதனை,

**"முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர்"**

**குறள்-155-1**

என்ற வரி உணர்த்துகிறது.

**நீர்நிலை அமைப்பு**

பண்டைய தமிழர் பயிர்த்தொழிலுக்குக் குறைவிலா நீர்வளம் தேவை என்பதை உணர்ந்திருந்தனர். குறவர் பருவம் தொடங்குமுன் மழைபெய்யும் வாய்ப்பினை மேகத்தின் இயக்கத்தைக் கொண்டு அறிந்திருந்தனர். அதற்கேற்பத் தம் பயிர்த்தொழில்களைச் செய்துள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இச்செய்தியினை,

**“பல்மர உயர்சினை மின்மினி**

**விளக்கத்து செல் மழை இயக்கம் காணும்”**

**நற்-44-10-11**

என்ற பெருங்கௌசிகனார் கூற்றால் அறியலாம்.

குறிஞ்சி நிலத்தில் மலையினின்றும் வீழும் அருவியும், மலையில் அமைந்த சுனையும் இயற்கை நீர்நிலைகளாகும். அருவிநீரும், சுனைநீரும் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதை

**“நிலம் நீர் ஆர, குன்றம் குழைப்ப**

**அகல் வாய்ப் பைஞ் சுனைப் பயிர் கால்யாப்ப**

**நற்-5-1-2**

என்றும்,

**மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**

**அருவியின் விளைக்கும்**

**குறுந் -371-2-3**

எனவும் வரும் பாடலடிகளினின்றும் அறியலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

குறிஞ்சி நிலப் பகுதியில், நீர்வளம் எக்காலத்துக்கும் இருக்கக்கூடிய வகையில் பாறைகள், சிறுமலை ஆகியவற்றிக்கிடையே ஏரி, குளம் போன்றவற்றை அமைத்தனர். அதில் பெய்யும் மழையைச் சேகரித்து வைத்தச் செய்தியினை,

**"தொழில் மழை பொழிந்த....."**

**அகம்-252-11,**

என்ற வரியின் மூலம் அறியலாம். குறவர்கள் இதனைத் தொழில் மழை என்றனர். இந்நீர் நிலைகளுக்குப் பழுது நேராமல் இருத்தற்பொருட்டு ஒரு காவலனை அமர்த்திக் காத்து வந்தனர். அவனுக்கு 'பெருங்குளங் காவலன்' என்று பெயரிட்டு அழைத்துள்ளனர் என்பதை,

**எறிதிரைத் திவலை தூஉம்**

**சிறுகோட்டுப் பெருங்குளம் காவலன்.........**

**அகம்-252-12-13**

என்ற நக்கண்ணையார் கூற்றால் அறியலாம்.

குறவர் அருவியை உடைய பரந்த நிலத்தில் மலை நெல்லை விதைப்பர் என்பதை

**"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்" குறுந்-100-1**

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**தினைப்பயிர்**

குறிஞ்சி நிலத்தில் விளையும் முக்கிய பயிர் தினை ஆகும். தினையின் தண்டுப்பகுதி பசுமையாகவும், அடிப்பாகம் கருமையாகவும் இருக்கும் என்பதனை,

**"தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால"**

**குறுந்-25-3 வரி**

என்ற பாடல் வரியும்,

**"கருங்காற் செந்தினை கடியு முண்டன"**

**நற்-122-2**

என்ற பாடல் வரியும் உணர்த்துகின்றன. பொன் போன்ற சிறு தினைகளை அந்நிலத்தில் விளைத்துள்ளதை

**"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை”**

**குறுந்-**133-1

என்ற உறையூர் முதுகண்ணன் சாத்தன் கூற்றால் அறியலாம்.

**தினை வகைகள்**

தினையில், கருந்தினை, செந்தினை, பொன்நிறத்தினை என மூன்று வகைகள் இருந்துள்ளன. இதனை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**"மலை அயற் கலித்த மைஆர் ஏனல்"**

**நற்-108-1**

என்றும்,

**"முதைச் சுவற் கலித்த மூரிச் செந்தினை"**

**அகம்-88-வரி 1**

எனவும்,

**"நான் பொன் அன்ன புனிறு நீர் ஏனல்"**

**ஐங்-263-1**

என்றும் வரும் பாடல் வரிகளால் அறிய முடிகின்றது. மூவகைத் தினை வகைகளில் பொன்நிறத் தினையை முதல் தரமாகக் கருதியுள்ளனர்.

**தினை விதைத்தல்**

குறவன் மரங்களையும், களைகளையும் வெட்டி எறிந்த பின்பு, அவ்விடத்தை உழுது தினை விதைத்த முறையினை,

**“அமைஅறுத்து இயற்யிய வெவ்வாய்த் தட்டையின்,**

**நறுவிரை ஆரம் அறஎறிந்து உழுத**

**உளைக்குரல் சிறுதினை..... அகம்-388-2-4,**

என்றும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**"புன்புல மயக்கத்து உழுத ஏனல்"**

**ஐங்-283-1-2**

எனவும் வரும் பாடல்களாலும் அறிய முடிகின்றது. மேலும் தீயினால் சுட்டெரித்துத் திருத்திய கொல்லையில் பயிர் செய்துள்ளதை

**"எரிதின் கொல்லை இறைஞ்சிய ஏனல்"**

**அகம்-288-5**

**"………………..சூடுறு வியன்புனம்"**

**அகம்-368-1**

என்றும் ,

**"புனவர் கொள்ளியின்………."**

**ஐங்-295-3**

எனவும்,

**"நகை அகில் வயங்கிய நளிபுன நறும்புகை"**

**குறு-339-1**

என்பதன் மூலமும் அறிய முடிகின்றது.

**தினை முளைத்தல்**

பருவத்தே மழை பெய்ததால் சிறுதினை அழகுபெற முளைத்து நின்ற காட்சியினை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**.......................முளை முதிர் சிறுதினை**

**தளிர்பெறத் தகை பெற்றாங்கு.....**

**கலி-53: 22-23**

என்று கலித்தொகை உணர்த்துகிறது.

**தினை கதிர்**

குறிஞ்சி நில மலைப்பக்கத்தில் தினை விளைந்து கதிர் முற்றி காணப்பட்டது

என்பதை,

**"புலர்குரல் ஏனற் புழையுடை......**

**அகம்-82 : 12**

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**தினைக்கதிர் கவர்தலும் காத்தலும்**

புன்செய் நிலத்தில் விளைந்த தினைப் பயிர்களை முள்ளம்பன்றி, பன்றி, கானங்கோழி, கிளி, யானை ஆகிய உயிரினங்கள் சேதப்படுத்தியுள்ளன. அதனைக் காப்பதற்கு ஆண்களும் பெண்களும் ஈடுபட்டுள்ளனர். பன்றியைப் பொறி வைத்தும், யானைகளைக் கவண்கல், கிணைப்பறை, தொண்டகப்பறை பயன்படுத்தியும் தினைப்புனத்தை காத்துள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பெண்கள் குளிர், கழல், தட்டை முதலிய கருவிகளைக் கொண்டு பயிர்களைக் கவர வரும் பறவைகளை விரட்டியுள்ளனர்.

**முள்ளம் பன்றி**

குறிஞ்சி நிலத்தில் வாழும் முள்ளம் பன்றி உயர்ந்த மலையிடத்து உள்ள பெரிய தினைப்புனத்தில் புகுந்த காட்சியினை,

**“எய்ம் முள் அன்ன பரூஉ மயிர் எருத்தின்**

**செய்யும் மேவல் சிறுகட் பன்றி**

**ஓங்கு மலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி**
**நூழை நுழையும் பொழுதில்”**

**நற்-98: 1-5**

என்று உக்கிரப்பெருவழுதி படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

மேலும் கானவர் உழுது விளைவித்த வளைந்த தினைக்கதிரைச் சிறிய கண்ணும் பெரிய சினமும் உடைய ஆண்பன்றி தின்றதை,

**“சிறு கட் பன்றிப் பெருஞ் சின ஒருத்தல்**

**துறுகட் கண்ணிக் கானவர் உழுத**

**குலவுக் குரல் ஏனல் மாந்தி”**

**நற்-386: 1-3**

என்னும் பாடல் வரிகள் சுட்டுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**பன்றியைப் பொறி வைத்துப் பிடித்தல்**

தினைப்புனத்தில் மேயும் பன்றியைப்பிடிக்க, குறவர் 'அடார்' என்ற பன்றிப் பொறியைப் பயன்படுத்தியும், அம்பெய்தும், விளக்கேற்றியும் விரட்டியுள்ளனர். இதனை,

"**தினை உண் கேழல் இரிய, புனவன்**
**சிறு பொறி மாட்டிய பெருங் கல் படாஅர்**"

**நற்-119: 1-2**

என்ற பெருங்குன்றூர்கிழார் சுட்டியுள்ளார்.

**அம்பெய்து வீழ்த்துதல்**

சொரசொரப்பான பிடரியையுடைய ஆண் பன்றி, பெண் பன்றியுடன் சென்று திரண்ட அடிப்பகுதியையுடைய தினைக் கதிரைத்தின்ற பொழுது, கானவன் கல் நெருங்கிய வழியில் பதுங்கியிருந்து வில்லினால் அம்பெய்து, வெண்மையான தந்தத்தையுடைய ஆண்பன்றியைக் கொன்றதை,

**"பிணர்ச் சுவற் பன்றி தோல்முலைப்**
**பிணவொடு கணைக்கால் ஏனல்**
**கைம்மிகக் கவர்தலின் கல் அதர் அரும்**
**புழை அல்கி, கானவன் வில்லின்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**தந்த வெண் கோட்டு ஏற்றை,"**

**நற்--336:1-4**

என்ற பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**விளக்கு ஏற்றி விரட்டுதல்**

பழங்கொல்லையாகிய மேட்டு நிலத்தில், தினைக் கதிர்களைத் தின்னுதற்கு வருகின்ற காட்டுப் பன்றியை பார்த்து கானவன், அதனை ஒட்டுதற்குக் காவற் பரண் மீது விளக்கினைக் கொளுத்தி வைத்து தினைப்புனம் பாதுகாக்கும் முறையினை,

**"புருவைப் பன்றி உருதிறம் நோக்கி**

**கடுங் கைக் கானவன் கழுதுமிசைக்**

**கொளீஇய நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி...."**

**அகம்-88 : 4-6**

என்று பூதன்தேவனார் குறிப்பிட்டுள்ளார். இவை அன்றி விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க வேலி அமைத்தலும் உண்டு. அந்தந்த நிலத்தில் வளரும் மரஞ்செடி கொடிகளைக் கொண்டே வேலியை அமைத்துள்ளனர். இதனை 'வாழ்முள்வேலி' என்றனர்.

இதனை,

**"வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை"[1]**

என்ற பாடல்வரி சுட்டுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**கிளி தினையைக் கவர்தல்**

மலைப் பகுதியில் வாழுகின்ற கிளிகள் தம் இனத்தோடு ஒன்று கூடி, தினைக் கதிரைக் கொள்ளையிட்டுத் தின்ற செய்தியினை,

**......................பைந்தார்**

**செவ்வாய் சிறுகிளி சிதைய வாங்கி**

**அகம்-192 : 4-5**

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

**கானங்கோழி தினையைக் கவர்தல்**

சிவந்த வாயினை உடைய கிளிகளால் கடித்துப் போடப்பட்ட கதிர்களை, வளைந்த சிறகுகளைக் கொண்ட கானங்கோழி தன் இனத்துடன் வந்து உண்டதை,

**"வளைசிறை வாரணம் கிளையோடு கவர"**

**அகம்-192 : 7**

என்ற வெண்கண்ணனார் கூற்றலால் அறியலாம்.

**பெண்கள் காவல்புரிதல்**

மலைப்பகுதியில் விளைந்த தினைக்கதிர்களைக் குறவர் மகள் காவல் காத்ததை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“கானக் குறவர் மடமகள்**

**ஏனல் காவல் ஆயினள்**

**நற்-102: 8-9**

**"கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்திணை"**

**நற்-22-1**

என்ற நற்றிணைப் பாடல்களால் அறியலாம்.

பெண்கள் தினையில் படியும் கிளிகளை ஒட்டுவதற்கு இசைத்தலும், விளித்தலும், கருவிகளால் ஒலியெழுப்புதலும் போன்ற மூன்று வகையான தொழில் நுணுக்கங்களைக் கையாண்டுள்ளனர். இதனை,

**“சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்**

**படுகிளி கடியும் கொடிச்சி கைக் குளிரே**

**இசையின் இசையா, இன்பாணித்தே**

**கிளி 'அவள் விளி' என விழல் ஒவாவே”**

**குறு-291-1-4, எண்.**

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**விளித்தல்**

தினைப்புனத்தில் அடிக்கடி எழுந்து சென்று கிளிகளை ஓட்டுவதற்காக தெளிந்த ஒலிகளை இடையிடையே எழுப்பி அங்குமிங்கும் நடந்து வருதல் வேண்டும். இவ்வாறு செய்வது விளித்தல் முறையாகும். இம்முறையினைக் குறவர் மகளிர் பின்பற்றியதை,

**எழுந்து எழுந்து**

**கிள்ளைத் தெள்விளி இடைஇடை பயிற்றி**

**ஆங்கு ஆங்கு ஒழுகாய் ஆயின்....**

**அகம்-28-9-11**

என்று பாண்டியன் அறிவுடைய நம்பி எடுத்துரைக்கின்றார். அன்றியும் குறிஞ்சிப் பாட்டிலும்

இதனை,

**புள் ஆர் இயத்த விலங்கு மலைச் சிலம்பின்,**

**வள் உயிர்த் தெள்விளி இடைஇடைப்**

**பயிற்றி கிள்ளை ஒப்பியும், கிளைஇதழ் பறியா[2]**

என்னும் வரிகளாலும் அறிந்து கொள்ள முடிகின்றது. **"கிளியை ஓட்டுவதற்கு 'ஆயோ' எனக்கூறி ஒலி எழுப்புவர்"3** என்று வி. நாகராசன் குறிப்பிட்டுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## முடிவுரை

எட்டுத்தொகை அகநூல்கள் சங்ககால தமிழரின் அக வாழ்க்கையை மட்டுமல்லாது, அவர்களின் இயற்கை சார்ந்த தொழில்முறைகள் மற்றும் வாழ்வாதார அமைப்புகளையும் நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றன. இந்நூல்களில் காணப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணை நிலங்கள், அந்தந்த நிலங்களின் இயற்கை வளங்களுக்கேற்ப உருவான தொழில்களை பிரதிபலிக்கின்றன. இதன் மூலம் நிலம், இயற்கை, மனிதன் ஆகியவை ஒருங்கிணைந்த வாழ்வியல் அமைப்பாக சங்ககாலத்தில் நிலவியதை உணர முடிகிறது.

சங்ககால மனிதன் இயற்கையைப் பயன்படுத்தும் பொருளாக மட்டும் அல்லாமல், தன் வாழ்வுடன் இணைந்த உயிர்ச்சூழலாகக் கருதியுள்ளான். அதனால், அவன் மேற்கொண்ட தொழில்கள் இயற்கையைச் சுரண்டும் தன்மை இல்லாமல், அதனுடன் ஒத்திசைவாக அமைந்துள்ளன. வேட்டையாடல், மேய்ச்சல், வேளாண்மை, மீன்பிடித்தல் போன்ற தொழில்கள் அனைத்தும் காலநிலை, நிலவளம், நீராதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டுள்ளன.

மேலும், இயற்கை மாற்றங்கள் மனித வாழ்வியலில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதும் பாலை திணை விளக்கங்களின் மூலம் தெளிவாகிறது. வளம் குறையும் சூழலில் தொழில்களும் வாழ்வியலும் மாற்றம் அடைவதை அகநூல்கள் சுட்டுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இதன் மூலம் சங்ககால சமூகத்தின் சுற்றுச்சூழல் உணர்வு, நிலைத்த வாழ்க்கைச் சிந்தனை மற்றும் இயற்கை மதிப்பீடு ஆகியவை உயர்ந்த நிலையில் இருந்தன என்பது வெளிப்படுகிறது.

எனவே, எட்டுத்தொகை அகநூல்களில் இயற்கை சார்ந்த தொழில்கள் குறித்த ஆய்வு, சங்ககால தமிழ்சமூகத்தின் பொருளாதார அமைப்பு, சுற்றுச்சூழல் அறிவு மற்றும் பண்பாட்டு ஒருங்கிணைப்பை புரிந்து கொள்ள உதவும் முக்கியமான ஆய்வுத் தளமாக விளங்குகிறது.

## சான்றெண் விளக்கம்

**1. பெரும்பாணாற்றுப்படை, பா. அடி 126.**

**2. குறிஞ்சிப்பாட்டு, பா. வரி 99-101.**

**3. வி. நாகராசன், பத்துப்பாட்டு மூலமும் உரையும், பக். 263.**

## துணை நின்ற நூல்கள்

**1.இளம்பூரணர் (உ.ஆ)**
**தொல்காப்பியம், பொருளாதிகாரம்**
**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை**
**முதற்பதிப்பு 1965 –**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## உரையாசிரியர்கள்:

**2.பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)**

**ஸ்ரீ செண்பகா பதிப்பகம்**

**மறைமலை அடிகள், இராகவையங்கார்.இரா புலியூர்க்கேசிகன், கந்தையா.ந.சி சென்னை 600 017 -**

**பதிப்பாண்டு - டிசம்பர், 2021**

**3.சாமிநாதையர்.உ.வே. (உ.ஆ)**

**குறுந்தொகை**

**கபீர் அச்சுக்கூடம் சென்னை -முதற்பதிப்பு 1962**

**4.சாமிநாதையர்.உ.வே. (ப.ஆ)**

**புறநானூறு (மூலமும் பழைய உரையும்)**

**கபீர் அச்சுக்கூடம்**

**சென்னை, முதற்பதிப்பு – 1963**

**5.அறிஞர். சுப்பிரமணியன்.ச.வே**

**தொல்காப்பியம் தெளிவுரை**

**மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600 108**